# தேவனுடைய பிரதான நடவடிக்கைகளை பற்றிய சுருக்கமான விவரம்
# A SUMMARY OF GOD'S MAJOR MOVES

**அறிமுகம்**

நமது வேதபாடத்தை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்ற சுவிசேஷ புத்தகங்களோடு தொடர்புபடுத்தி, முன்னோக்கிக் கொண்டு செல்ல நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றால், முந்தைய பாடங்களின் வரிசையான தலைப்புகளை கவனிக்க வேண்டும். நமது கவனத்தை அவைகளின் பக்கம் திருப்புவதே இந்தப் பாடத்தின் நோக்கம். சுவிசேஷ புத்தகங்களில் காணப்படும் இயேசுவின் போதனைகள் முதலாவது இஸ்ரவேலர்களுக்கும், யூத மார்க்கத்தமைந்தவர்களுக்குமே கொடுக்கப்பட்டன. இயேசு மறுபடியும் பரலோகத்திற்கு போய்ச் சேர்ந்த பிற்பாடு அவருடைய போதனைகள் உலகத்திலுள்ள யாவருக்கும், அதிலும் விசேஷமாக "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளுக்கும்" கிடைக்கக்கூடிய வாய்ப்பு உண்டானது. ஆபிரகாமுக்குச் செய்யப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தங்கள் யூதருக்கும், புறஜாதிகளுக்கும் உரியவைகளானதால், எழுத்து வடிவத்திலுள்ள சுவிசேஷ புத்தகங்கள் இந்த உலகத்திலுள்ள யாவரும் படித்து அறிந்துகொள்வதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளன. தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய சத்தியத்தை அனைத்து தேசங்களிலும் உள்ள அநேக மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்றாலும், இயேசு கிறிஸ்துவினால் போதிக்கப்பட்ட நீதிநெறிகள் ஏதோ ஒரு வகையில் உலகத்திலுள்ள குடும்பங்களுக்கும், தனி நபர்களுக்கும் ஆசீர்வாதமாகவே இருந்து வருகின்றன. கடந்த பாடங்களில் காணப்படும் தலைப்புகள் "கிறிஸ்துவுக்குள்" எப்படி நிறைவேறும் என்பதைக் குறித்து இப்பாடத்தில் விளக்கங்கள் கொடுக்கப்பட உள்ளன. இயேசு போதித்த தெய்வீகக் கொள்கைகள் மீதும், நீதி நெறிகள் மீதும், செயல் முறைகள் மீதும்





கிறிஸ்தவர்கள் விசுவாசம் வைத்துள்ளனர். *லூக்கா 4:43.* தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து போதிப்பதற்கு பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலை ஏற்றுக்கொள்ளும்படியாக அவர் தமது அப்போஸ்தலருக்குப் பயிற்சி கொடுத்தார். *அப்போஸ்தலர் 20:25; 1 கொரி. 2:10-13;4:20; 2 கொரி. 3:5.*

**சுருக்கமான விவரம்**

அ. பின்வரும் ஆறு காரியங்களும் நான்காம் பாடத்தின் அறிமுகப் பகுதியிலிருந்து எடுத்து எழுதப்பட்டுள்ளன:

1. *"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமா வானான்." ஆதியாகமம் 2:7, பார்க்கவும் யோபு 33:4.*
2. *"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." ஆதி. 1:27, பார்க்கவும் எபிரெயர் 12:9; யாக்கோபு 3:9.*
3. *"தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்." ரோ. 8:29; 2 கொரி. 5:16-19; கொலோசெயர் 1:21-23; 3:12-14.*
4. **தேவனுடைய முதல் உடன்படிக்கை :**
   *"ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." ஆதியாகமம் 2:17; வெளி. 22:14,19.*

5. *“அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை...தேவர்களைப்போல் இருப் பீர்கள்.” ஆதி. 3:4,5; 2 கொரி. 11:3.*
*“பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராத படிக்குச் செய்யவேண்டும்.” ஆதி. 3:22.*
6. *“அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத் துக்குப்போம் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.” ஆதி. 3:24.*

மேற்கண்ட விவரமானது 1 முதல் 3 வரை உள்ள பாடங்களில் கொடுக்கப்பட்டுள்ள சிந்தனைகளின் தொடர் வரிசையாகும். தேவன் ஏன் மனுக்குலத்தை படைத்தார்? எப்படிப் படைத்தார்? என்ன தவறு நிகழ்ந்தது? இவைகளைப் பற்றிய விவரங்கள் இப்பாடங்களில் உள்ளன. இந்த மூன்று காரியங்களின் தனிச்சிறப்புகளையும் பற்றிய புரிந்துகொள்ளுதலும், அவைகளின் மீதுள்ள விசுவாசமும், தேவனுடைய ராஜ்யத்தின் ஒரு பகுதியில் இடம் பெற்றுள்ள நிகழ்கால வாழ்க்கையை பற்றி வேதப்புத்தகம் தெரிவிக்கின்ற அர்த்தத்தை ஒழுங்காகப் புரிந்துகொள்வதற்கு அடித்தளமாக அமைகின்றன. அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கும்படியாக இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு ராஜ்யம் கொடுக்கப்பட்டிருக் கின்றது. *எபிரெயர் 1:9;2:10.* தேவன் மனுக்குலத்தை எப்படி படைத்தார். ஏன் படைத்தார் என்ற பாடங்கள் வேதத்தை வாசிக்கும் கிறிஸ்தவனுடைய “சிந்தனைப் போக்கை” உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்கின்றன. * நமது “சிந்தனைப் போக்கு” நமது கற்பனை சக்தியோடு இணைந்து





நம்பிக்கையை தூண்டுகிறது. தேவனுடைய வார்த்தை மீது கிறிஸ்தவர்கள் நம்பிக்கை வைப்பதின் மூலமாக அவர்களுக்கு திடநம்பிக்கை உருவாகின்றது. இந்த திட நம்பிக்கையை முழு மனதோடு சார்ந்து கொள்ளும்போது நமக்கு விசுவாசம் உருவாகின்றது. *எபிரெயர் 4:2.*

மனிதனுக்கு இருக்கின்ற கற்பனா சக்தியானது தேவனுடைய வார்த்தை சொல்லும் காரியத்தின்மீது நம்பிக்கைக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கின்றது. *ரோமர் 8:24,25.* செயல்திறன் கொண்ட கற்பனாசக்தியும், தேவனைச் சார்ந்துகொள்கின்ற மனமும் இல்லாமல் வேதாகமத்தை வாசிக்கின்ற ஒருவரால் அதன் பலனை பெற்றுக்கொள்ள முடியாது. தேவன் நமக்கு வழங்குகின்ற நன்மைகளைப் பற்றி நம்முடைய மனதில் கற்பனை செய்து வைத்துக்கொள்வதற்கு கற்பனாசக்தி உதவுகின்றது. தேவன் நமக்கு தருகின்ற எல்லா நன்மைகளையும் இக்காலத்தில் நாம் அனுபவிக்க முடியாமற்போனாலும் அவைகளைப் பற்றிய நம்பிக்கையின் சந்தோஷத்தோடு நாம் “கிறிஸ்துவுக்குள்” வாழ்கின்றோம். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், நாம் தேவனைச் சார்ந்துகொண்டு அவரிடமிருந்து கிடைக்கும் என்று நம்பிக்கையோடு நாம் எதிர்பார்க்கின்ற எல்லா பலன்களைக் குறித்தும் சந்தோஷப்படுவதற்கு நமது விசுவாசம் நமக்கு உதவி செய்கிறது. கிறிஸ்தவர்கள் தங்கள் பிரயோஜனத்திற்கென்று வேதத்தை கற்றுக்கொள்வதன் மூலமாகவே தங்களுடைய “விசுவாசக் கதவினை” தேவனுடைய ராஜ்யத்திற்கென்று அதிகமதிகமாக விரிவாகத் திறக்க முடியும்.

இயேசுவும், அப்போஸ்தலர்களும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்தார்கள். *லூக்கா 4:43; அப்போஸ்தலர் 20:25.* தேவனுடைய வார்த்தையை நாம் கற்றுக்கொள்வதையும், நமது விசுவாச முன்னேற்றத்தையும் ஒருங்கிணைத்து ஒப்பிடவேண்டுமென்றால், ஒரு சுழலும் கதவுக்கு ஒப்பிடலாம்: நாம் தேவனுடைய வார்த்தையை கேட்கிறோம். விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளுகிறோம். ஆகையினால், தேவனுடைய ராஜ்யத்திற்கென்று நமது ஆவிக்குரிய கதவினைத் திறந்து கொண்டு

உள்ளே நுழைகின்றோம். பிறகு நாம் திரும்ப திரும்ப அதையே செய்கின்றோம். கிறிஸ்தவர்கள் "விசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்கு" முன்னேறுகிறார்கள். அதன் மூலம் ''மகிமையின் மேல் மகிமை'' அடைகிறார்கள். *ரோமர் 1:17; 2 கொரி. 3:18; 2 பேதுரு 1:3-11.* ''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாத வைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." *எபிரெயர் 11:1.* பரலோக ராஜ்யம் கிறிஸ்தவர்களுடைய மனநிலையிலும் ஆவிக்குரிய சூழ்நிலையிலும் இடம் பெற்றுள்ளது.

நமது நீதியுள்ள நடக்கையால் விசுவாசமானது "பூரணப்படுத்தப் படுகிறது." நாமும் நமது இரட்சிப்புக்குள்ளாக வளர்ச்சியடைகிறோம். *மத்தேயு 7:24; லூக்கா 17:20,21; பிலிப்பியர் 3:7-14; யாக்கோபு 2:22; 2 பேதுரு 1:3-11; 1 பேதுரு 2:2,3.* கர்த்தருடைய ராஜ்யத்தில் இடம் பெற்றுள்ள நமது ஆவிக்குரிய சூழ்நிலையின் காரணமாக சகோதர, சகோதரிகளோடு நம்மால் அன்பாக நடந்துகொள்ளமுடிகின்றது. *மத்தேயு 5:8,9; 1 பேதுரு 1:22-25.* தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கின்ற கிறிஸ்தவர்களுடைய குடியிருப்பு நித்தியமானதாக இருக்க முடியும். *பிலிப்பியர் 2:12-16; 3:20,21.* தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கின்ற நமது சுதந்தரத்தைப் பற்றி சிந்திக்கின்ற வேளையில், "இருக்க முடியும்" என்ற அர்த்தத்தில் தான் நாம் அதை குறிப்பிடமுடியும், அதேனென்றால், நமது சுதந்தரத்தை பாதுகாப்பவர் தேவன், அவர் கொடுக்கும் பாதுகாப்பு நமது விசுவாசத்தை பொறுத்தே அமைகிறது. *1 பேதுரு 1:3,4.*

"மனுஷன் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்" என்ற மூன்றாம் பாடத்தின் தலைப்பினை சந்தர்ப்பப் பொருளாகக் கொண்டு தேவனுடைய கிருபையின் அவசியத்தை புரிந்துகொள்ளவேண்டும். பார்க்கவும் *ஆதி. 3:22.* நன்மை இன்னதென்றும், தீமை இன்னதென்றும் அறியக்கூடிய தனித்திறமை தெய்வீகமானவருக்கு இருக்கிறது என்பது இதன் அர்த்தம். சாத்தானுக்கு எதிராக நின்று வாதம் பண்ணிய வேளையில் இயேசு இதை நிரூபித்துக் காட்டினார். *மத்தேயு 4:1-11.* எல்லா மக்களும்





ஆதாமிலிருந்து உற்பத்தியானவர்களாக இருப்பதால், "நன்மை தீமை பற்றிய அறிவை" பெற்றுக்கொள்ளும் மனோ சக்தி நமக்கு இருக்கின்றது. *1 கொரி. 15:44-49.* நமது பிரச்சனை என்னவென்றால், அந்த தனித்திறமை மட்டுமே நம்மிடம் இருக்கிறது என்பது தான். தேவனுடைய வார்த்தைகளிலிருந்து தீமை இன்னதென்றும், நன்மை இன்னதென்றும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். *எபிரெயர் 5:14.* மனதிலும், மனச்சாட்சியிலும் நாம் பக்குவம் அடையும் காலம் முதற்கொண்டு, தீமைக்குப் பதிலாக நன்மையை தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு நமக்கு வந்துவிடுகின்றது. *ரோமர் 2:15.*

ஆ. நான்காம் பாடம் முதல் ஏழாம் பாடம் வரை உள்ள வேதாகம தலைப்புகளை வேதத்தை கற்றுக்கொள்ளும் மாணவர்கள் புரிந்து கொண்டு, நம்பி, கால வரிசை முறையில் அவைகள் மீது விசுவாசம் வைக்க வேண்டும். பழைய ஏற்பாட்டைப் பற்றிய "ஆழ்ந்த" அறிவு இவைகளுக்கு தேவைப்படுமென்றாலும், கிறிஸ்தவர்களுடைய விசுவாசத்தைக் கட்டி எழுப்பும் கற்களாக இவை விளங்குகின்றன. இந்தத் தலைப்புகள் ஆவிக்குரிய காரியங்களை வெளிப்படுத்தி, புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை வாசிப்பதற்கு வேண்டிய அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கின்றன. அப்படியிருப்பினும், தேவன் மனுக்குலத்தை ஏன் படைத்தார், எப்படிப் படைத்தார் என்பவை களைக் குறித்து போதுமான விசுவாசம் நமக்குள் உருவாகும் வரையிலும் இவைகளை நாம் ஒழுங்காக புரிந்துகொள்ள முடியாது. ஆதாமும், ஏவாளும் தேவனுடனான உடன்படிக்கையை முறித்துப்போட்டதால் மனுக்குலத்துக்கு என்ன நேர்ந்தது என்பதை தெரிந்துகொண்டு, அதை நம்பி அதன் மீது விசுவாசம் வைக்கும் வரையிலும், தேவன் தெரிவிக்கின்ற விவரங்களோடு அவருடைய கிருபையை ஒருங்கிணைக்க முடியாது.

வேதாகமத்தில் தேவன் தெரிவிக்கின்ற மையப் பொருளை பழைய ஏற்பாட்டில் தொடங்கி புதிய ஏற்பாட்டுக்குள்ளும் தொடர்ந்து அறிந்து

கொள்வதற்கு தேவன் ஆபிரகாமோடே செய்த உடன்படிக்கைகள் மற்றும் வாக்குத்தத்தங்களின் பயன்பாட்டை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். எடுத்துக்காட்டாக, ‘‘இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்’’ இதை நாம் புரிந்துகொள்வது சிரமமமாக இருக்கலாம். *ரோமர் 11:26.* ‘‘இஸ்ரவேலரெல்லாரும்’’ என்ற வார்த்தை மாம்சத்துக்குரிய இஸ்ரவேலரை குறிக்கிறது என்ற தவறான தகவலின் அடிப்படையிலான ஒரு கருத்தின் காரணமாக “கிறிஸ்தவ சீயோன்” (Christian Zionism) என்ற கொள்கை அமெரிக்காவில் உருவாகியுள்ளது. மட்டுமல்ல, இக்கருத்தின் காரணமாக மத்திய கிழக்குப் பகுதியில் மிகுந்த சச்சரவும் உருவாகியிருக்கின்றது. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியிலிருந்த பரிசுத்தவான் களிடம் பழைய ஏற்பாட்டில் உள்ள மாம்சத்துக்குரிய இஸ்ரவேலரைப் பற்றி பேசத் தொடங்கி, அதை ஜாக்கிரதையாக புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர் பகுதியில் ஆரம்பமான ஆவிக்குரிய இஸ்ரவேலரிடம் கொண்டு போய் முடிக்கின்றான். ரோமர் 9–ஆம் அதிகாரம் முதல் 11–ஆம் அதிகாரம் வரை பார்க்கவும். இந்த வேதாகமப் பகுதியை ஐக்கிய நாடுகள் அமைப்பின் (UN) அங்கத்தினர்கள் வாசித்து, இந்த சத்தியத்தை ஏற்றுக்கொள்வார்களானால், இந்த உலகத்திற்கு நன்மையாக இருக்கும்.

தற்பொழுது தேவன் மனுக்குலத்தோடு செய்து கொண்டுள்ள உடன்படிக்கையில் இயேசுவின் போதனைகளே ஜீவப் பிரமாணங்களாக இருக்கின்றன. *எபிரெயர் 8:10-12.* தேவன் உடன்படிக்கைகள் மூலமாகவே எப்பொழுதும் மனுக்குலத்தோடு உறவாடி வருகின்றார். தேவனுடைய வார்த்தையை கேட்பது, புரிந்துகொண்ட காரியத்தின் மீது விசுவாசத்தை வளர்த்துக் கொள்வது மற்றும் நமது விசுவாசத்துக்கு கீழ்ப்படிந்திருப்பது ஆகிய செயல்களின் மூலமாகவே புதிய உடன்படிக்கையின் பிரமாணங்கள் கிறிஸ்தவனுடைய மனதிலும், இருதயத்திலும் எழுதப்பட்டு





வருகின்றன. *ரோமர் 1:5;16:25-27.* இந்த ஆவிக்குரிய வளர்ச்சி முறையின் பலனாக கிறிஸ்தவனுடைய குணமும், நடவடிக்கைகளும் இயேசு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பானவைகளாக தொடர்ந்து மாற்றப்படுகின்றன. புதிய உடன்படிக்கையிலுள்ள ஜீவப் பிரமாணத்தை நாம் ஏற்றுக்கொள்வதன் மூலம் இயேசுகிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாறுகின்றோம், ஏனென்றால் “அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.” *யோவான் 1:4.* புதிய உடன்படிக்கையை பொறுத்த வரையில், இயேசு கிறிஸ்துவே நமது ஜீவப்பிரமாணமாக இருக்கின்றார். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். *1 யோவான் 3:4.*

1. மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமையையும், உடன்படிக்கைகளையும் பயன்படுத்தி “ஜீவாத்துமாக்களுடன்” தேவன் தமது உறவை “ஏற்படுத்திக்” கொண்டு அதை எப்படி “நிலை நிறுத்தினார்” என்பதை காட்டுவதே நான்காம், ஐந்தாம் பாடங்களின் நோக்கங்களாயிருக்கின்றன. ஆதாமுடைய அடையாளத்தை எல்லா மக்களும் பெற்றிருப்பதனால் பாவம் உலகத்தில் நுழைந்து விட்டது என்று அப்போஸ்தலனாகிய பவுல் விளக்குகிறான். *ரோமர் 5:12-14.* ஆகையால், முதிர்ச்சிப் பெற்ற மக்கள் “விழிப்புணர்வுடன்” செயல்படக்கூடிய சக்தியை பெற்றிருக்கிறார்கள். தேவனுடைய உடன்படிக்கை கள் மீது விசுவாசம் உள்ளவர்களாய் நமது விருப்பங்களை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க கற்றுக்கொள்ளும் போது, நம்மை நீதிமானாக்கும் கிருபையை நாம் அனுபவித்து மகிழ்கிறோம். தேவனுடைய சித்தமும், வாக்குத்தத்தங்களும் அவருடைய உடன்படிக்கைகளில் இடம் பெற்றுள்ளன. முதல் மூன்று பாடங்களில் உள்ள வசனங்களைக் கொண்டு “விசுவாசத்திற்கான அடித்தளத்தை” அமைத்துக்கொண்ட பிறகு, நான்காம் ஐந்தாம் பாடங்களில் உள்ள தலைப்புகளை

நம்மால் எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இது வேதத்தை கற்றுக்கொள்வதற்கு ஒரு சரியான வழியாக இருக்கின்றது. இதே சமயத்தில் நமது விசுவாசத்தை ஒழுங்கான முறையில் கட்டி எழுப்புவதற்கான ஒரு பயிற்சியாகவும் இருக்கின்றது.

**குறிப்பு :** வளர்ச்சியடைந்த வாலிபப் பிள்ளைகள் சந்தித்து வருகின்ற பிரச்சனைகளைக் குறித்து அறிந்துகொள்ள தயவுகூர்ந்து பின்வரும் வசனங்களை பாருங்கள். *உபாகமம் 1:39; ஏசாயா 7:16; ஆமோஸ் 5:15; ரோமர் 12:9;16:19; எபிரெயர் 5:14.* "ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேறிய" சூழ்நிலையில் வாழ்ந்து வரும் மனிதர்கள் வாலிப வயதை அடையும் போது நன்மை தீமை அறிகிற அறிவைப் பெற்றுக்கொள்கிறதினால், தீமையை நன்மையினாலே ஜெயிக்க வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கின்றது. இந்த கடமையை அவர்கள் நிறைவேற்று வதை பொறுத்து தான் அவர்களுக்கு மரணம் நேரிடுமோ அல்லது ஜீவன் கிடைக்குமோ என்பது முடிவு செய்யப்படும். *உபாகமம் 30:15.* தீமையை நன்மையினால் ஜெயிக்கக் கற்றுக்கொள்வதற்கு வாழ்நாள் முழுவதும் அவர்கள் போராட வேண்டியிருக்கிறது; இப்படி போராடுவதற்கு தேவனுடைய கிருபை அவர்களுக்கு அவசியமாய் இருக்கின்றது. நான்காம் பாடத்தை தயவுகூர்ந்து மீண்டும் பாருங்கள்.

ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் இருந்தபோது பாவம் இல்லாதவர்களாய் இருந்தார்கள். அந்த நிலைமைக்கு அவர்களால் மறுபடியும் செல்ல முடியவில்லை; ஆகையினால், ஆதாம் முதல் மோசே வரையிலான கால கட்டத்தில், ஒரு நல்ல பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஒழுங்குபடுத்துவது போல, தேவன் மனுக்குலத்தை





ஒழுங்குபடுத்திவந்தார். அவர்களுடைய பாவங்கள் "கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை", அப்படி யிருந்தும், பூமியின் மீது வாழ்ந்து வந்த மனிதர் அநேகருடைய வாழ்க்கையில் மரணமே ஆளுகை செய்து வந்தது. *ரோமர் 5:12-14.* மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமையின் காலத்தில் கொடுக்கப்பட்டிருந்த தேவனுடைய உடன்படிக்கைகள், ஜீவப் பிரமாணத்தோடு தொடர்புடைய வையாக இருந்தன. தயவுகூர்ந்து ஐந்தாம் பாடத்தை மீண்டும் பார்க்கவும். இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் இந்த ஆசாரியத்துவ முறைமையின்படியானதாகவே இருந்தது. *எபி. 7:11-17.* எல்லா மனிதர்களும் ஆதாமிலிருந்து உருவாகிறதினால், சிறுபிள்ளைகள் வளர்ந்து பெரியவர் களாகி மனதிலும், மனச்சாட்சியிலும் இருதயத்திலும், உடலிலும் பக்குவம் பெற்றுவிட்ட பிற்பாடு, அவர்கள் மறுபடியும் சிறுபிள்ளைகள் என்ற நிலைமைக்கு திரும்புவதும், பாவம் இல்லாதவர்களாய் வாழ்வதும் சாத்தியமே இல்லை. பக்குவமடைந்த அவர்களுடைய மனங்களும், மனச்சாட்சி களும் அவர்களுடைய சிந்தனைகளையும், நடவடிக்கையை யும் குறித்து அவர்களிடம் கணக்கு கேட்கும். *ரோமர் 2:15.* அவர்கள் நன்மையென்று நம்புகின்ற காரியத்தை செய்யாமற் போனால் அவர்களுடைய "உள்ளான மனிதனுடைய" மனச்சாட்சியில் குற்ற உணர்வு உண்டாகும். எல்லாரும் "ஆதாமுக்குள்" இருக்கிறதினால், வயதில் பெரியவர்களான எல்லா மனிதருக்குமே இது போன்று நடக்கின்றது. "ஆதாமுக்குள்ளும்", "கிறிஸ்துவுக்குள்ளும்" வாழ்கின்ற கிறிஸ்தவர்களுக்கு நீதிமான்களாக்கப்பட்ட வாழ்க்கை இருக்கின்றது. பார்க்கவும் *ரோமர் 5:18; 1 கொரி. 15:22.* ஆதாம் ஏவாள் செய்த குற்றமே, தேவனைவிட்டு அவர்களை விலகிச் சென்று ஒளிந்துகொள்ளச்செய்தது. இதனால் தான்

தீமை செய்வதை வழக்கமாகக் கொண்டிருப்பவர்கள் தேவனுடைய வார்த்தையை மகிழ்ச்சியோடு கற்றுக்கொள்ள முடிவதில்லை. பார்க்கவும் *யோவான் 3:19,20.* நன்மை யானதை செய்வதில்லை என்ற முடிவுடன் நடந்துகொள்வது கெட்ட நடத்தையாகும். *ரோமர் 2:21.* மனிதர்களுக்குள் உண்டாகும் குற்ற உணர்வு அவர்களுடைய மகிமையை கொள்ளையடித்துவிடுகின்றது. மனிதர்களுடைய மனச்சாட்சி யிலிருந்து குற்ற உணர்வை நீக்குவதற்கான பலி வேறு எதுவும் இல்லாததினால், இப்பாவத்திற்காக செலுத்தப்படும் தேவனுடைய பலியாக இயேசு சிலுவையின் மீது மரணமடைந்தார். பார்க்கவும் *எபி. 9:8-15.* இந்தக் கிருபையானது விசுவாசத்தினால் தூண்டப்பட்டு, மனந்திரும்பி, மறுபடியும் பிறந்தவர்களாய் வாழ்கின்ற பாவிகளுக்கு பயனுள்ளதாக இருக்கின்றது.

2. ஆறாவது பாடமானது தேவன் ஆபிரகாமுடன் செய்து கொண்ட “வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கை” பற்றியதாய் இருக்கிறது. *ஆதி.12:1-3; யாத்திராகமம் 2:24.* தேவனுடைய உடன்படிக்கை மீது விசுவாசம் உள்ள மக்கள் மாத்திரமே “வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்” என்ற அடையாளத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை தெரியப்படுத்துவதே இந்தப் பாடத்தின் நோக்கமாய் இருக்கின்றது. யாக்கோபு மூலமாய் உருவான ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததிக்கு இது அடையாளமாய் இருக்கின்றது. “வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளென்ற” தெய்வீகக் கொள்கையின் அடிப்படையில் அவர் ஆபிரகாமோடே செய்து கொண்ட வாக்குத்தத்தங்களில் புறஜாதியாரும் சேர்க்கப் படுகிறார்கள். புறஜாதியாருக்கும் இடம் இருக்கிறது என்றாலும், இயேசு கிறிஸ்து ராஜாவாகவும், பிரதான





ஆசாரியராகவுமாகி, சில ஆண்டுகள் முடியும் வரையிலும் “விசுவாசக் கதவினை” புறஜாதிகளுக்கு தேவன் முறைப்படி திறக்கவில்லை. பார்க்கவும் *ஆதியாகமம் 12:1-3; அப்போ. 10:1-6,47;11:18;14:27; ரோமர் 9:6-8, 24-26.*

3. பழைய ஏற்பாட்டு விவரங்களில் தேவனுடைய ராஜ்யம் தங்களுக்குள் இருப்பதினால் மகிழ்ச்சியுடன் வாழ்ந்த மக்களை ஏழாம் பாடம் அடையாளம் காண்பிப்பதாக இருக்கின்றது. *மத்தேயு 6:10* வசனத்தில் இயேசுவின் ஜெபத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளும் தகவலின் அடிப்படையிலும், *லூக்கா 17:20* வசனத்தில் “தேவனுடைய ராஜ்யம் எப்பொழுதும் வரும்” என்ற கேள்விக்கு அவர் அளித்த பதிலின் அடிப்படையிலும் அவர்களுடைய குடியுரிமை அமைந்திருந்தது. தேவனுடைய சித்தம் எந்த மனிதனுடைய வாழ்க்கையில் செய்யப்படுகின்றதோ, அவனுக்குள் தேவனுடைய ராஜ்யம் இருக்கின்றது. சுபாவமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்த புறஜாதிகளுக்குள்ளும், *எபிரெயர் 11*ஆம் அதிகாரத்தில் பட்டியலிட்டு காட்டப் பட்டுள்ள விசுவாச மக்களுக்குள்ளும் தேவன் ஆளுகை செய்கின்ற வாழ்க்கை முறை காணப்பட்டது. *ரோமர் 2:14,15.* தேவன் மனுக்குலத்தை ஏன் படைத்தார்? இதை வேதத்தை கற்றுக்கொள்ளும் மாணவர்கள் புரிந்துகொள்ளா மற்போனால், பழைய ஏற்பாட்டு காரியங்கள் அவர்களது உற்சாகத்தை பாதிப்பவையாக இருக்கும். தேவன் தமது நித்திய ராஜ்யத்தில் இருக்கும்படிக்கு பிள்ளைகளை தேடுகிறார் என்பதை புரிந்துகொள்ளும் போது, அந்த பழைய ஏற்பாட்டு மக்களில் மீதியாயிருந்தவர்களை தமது நித்திய பிள்ளைகளாக்கிக்கொள்ளும்படி அவர் மேற்கொண்ட

நடவடிக்கைகளை நாம் சரியாக மதிப்பிட முடியும். “மீதியாயிருப்பது” என்ற கருத்தினை ரோமாபுரியில் இருந்த பரிசுத்தவான்களுக்கு தெரியப்படுத்துவதற்கு எலியாவின் வாழ்கையில் நடந்த ஒரு சம்பவத்தை அப்போஸ்தலனாகிய பவுல் தேர்ந்தெடுத்தான். பார்க்கவும் *ரோமர் 11:1-6.* தேவனுடைய ராஜ்யத்துக்கென்று பிள்ளைகளை உருவாக்குவதில் சம்பந்தப்பட்டுள்ள ஆவிக்குரிய வளர்ச்சியின் முக்கியத்துவத்தை கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். மனிதனை தேவன் படைத்ததற் கான நோக்கமும் இதுதான். பரிசுத்த ஆவியானவர் முழுமையாக பங்கெடுத்துக்கொள்ளும் வரையிலும் தேவனுடைய நோக்கமானது மனிதனுடைய இருதயத்தில் தோன்றியதில்லை. *1 கொரி. 2:6-13.* நம்மை “தேவனுடைய பிள்ளைகளாக்கும்” அவருடைய திட்டத்தின் மூலம், தேவன் நமக்குள் ஏற்படுத்தி இருக்கின்ற மகிமைக்கான தேவையும், மற்ற இயல்பான தேவைகளும் திருப்திப்படுத்தப்படுகின்றன. *மத்தேயு 6:33; ரோமர் 8:16.* மனிதர்களை அவர் உருவாக்கினதற்கான அவருடைய நோக்கமானது அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில் ஆரம்பமாகவில்லை. அது உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே அவருடைய மனதில் ஆரம்பமாகிவிட்டது. “தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது.” *1 கொரி. 4:20.* பவுல் குறிப்பிடுகின்ற “தேவனுடைய சபையானது” தேவனுடைய ராஜ்யத்திலிருந்து வேறுபட்ட ஒன்றல்ல.

தேவன் மனுக்குலத்தை படைத்ததற்கான நோக்கத்தையும், அவருடைய நித்திய ராஜ்யத்தையும் மனதிற்கொண்டு, ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை தேவன்





தெரிவிக்கின்ற விவரங்களை கிறிஸ்தவர்கள் வாசிக்க வேண்டும். கிறிஸ்தவத்தோடு இணைத்து தங்களை அடையாளப்படுத்திக்கொள்பவர்கள், வேதத்தில் இல்லாத வேறு பல கதைகளை உருவாக்கியிருக்கிறார்கள். ஏராளமான மக்கள் அதை சத்தியம் என்றும் ஏற்றுக்கொள் கிறார்கள். தங்கள் விருப்பப்படி கதைகளை அறிவித்துக் கொண்டிருக்கும் பிரசங்கியார்களும், பண்டிதர்களும் தேவனுடைய சத்தியத்துக்கு அப்பாற்பட்டு செயல்படு கின்றார்கள். இதனால் அவர்கள் சாத்தானுடைய பிரசங்கியார்களோ என்ற சந்தேகம் எழும்புகின்றது. *2 கொரி. 11:12-15; 2 தீமோ. 4:3-5; 2 பேதுரு 2:1-3; யூதா 17,18.* பேதுருவும், யூதாவும் தெரிவித்ததுபோல இது அவர்களே தங்களுக்கு தேர்ந்தெடுத்துக்கொள்கின்ற முடிவாக இருக்கின்றது. அவர்களை என்ன செய்யவேண்டும் என்று தேவன் அறிந்திருக்கிறார். அப்பேர்ப்பட்டவர்களை பின்பற்றி “பொய்யான கதைகளால் ஆன பெட்டிக்குள்” தங்களை அடைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு நன்மை செய்யும்படியாக நாம் முயற்சிக்கின்றோம். அவர்கள் தப்பி வெளியே வருவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதை காண்பிப்பது தான் இந்தப் புத்தகத்தின் நோக்கம். தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கவும், தேவனுடைய ராஜ்யத்தில் ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளவும் விரும்புகின்ற கிறிஸ்தவர்கள் கால வரிசை முறைப்படி வேதத்தை கற்றுக் கொள்ளவேண்டியது அவசியம்.

உலகத் தோற்றத்திற்கு முன்பாக தேவனுடைய மனதில் இருந்ததைப் பற்றி தெரிவிப்பதிலிருந்து நம்முடைய வேத பாடத்தை ஆரம்பிக்கின்றோம். *ரோமர் 8:28-30.*

அவருடைய மனதில் இருந்த காரியத்தையே அவர் தெரிவிக்கின்ற வேதாகம விவரத்தின் மையப் பொருளாக்கு கின்றோம். *ரோமர் 8:5-17;14:17,18.* இயேசு கிறிஸ்து திரும்ப வருவதை பற்றி தேவன் சொல்கிறதை நாம் கேட்கிறோம். மனுக்குலத்தை அவர் படைப்பதற்கு முன்பு அவருடைய மனதில் இருந்த விருப்பம் எதுவோ, அதை இயேசு நிறை வேற்றுவார். *எபிரெயர் 2:10-13.* தேவனுடைய பிள்ளைகள் மாத்திரமே சுதந்தரவாளிகளாய் இருக்கின்றார்கள். *மத்தேயு 19:29; 25:34; யாக். 1:12;2:5; வெளி. 21:7.*

நமது மார்க்கத்தை "சபை" என்ற வார்த்தையின் அளவுக்கு சிறிதாக்கி அதன் மதிப்பை குறைக்க எங்களுக்கு மனதில்லை. "கனி கொடுப்பதென்றால்" வேதத்தை கற்றுக்கொள்வதும், தேவனைத் தொழுதுகொள்வதும் தான் என்று குறுகிய விளக்கத்தோடு விட்டுவிடவும் எங்களுக்கு மனதில்லை. நாம் தனிப்பட்ட முறையில் தேவனுடைய வல்லமையோடு தொடர்புடையவர்களாக இருக்கிறோம். பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த மனிதர்களை தமது வல்லமையுடன் இணைத்துக்கொள்வதற்காக அவர் பல்வேறுபட்ட உடன்படிக்கைகளையும், சில விசேஷித்த காரியங்களை யும் தமது கருவிகளாக பயன்படுத்திக்கொண்டார். "கிறிஸ்துவுக்குள்" ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் கிறிஸ்தவர்கள் அனுபவித்து மகிழ்கிறார்கள். நாமே உலகத்துக்கு வெளிச்சமாகவும், உப்பாகவும் இருக்கிறோம். *மத்தேயு 5:13-16.* அப்படியே என்றைக்கும் இருப்போமாக!

இ. யாக்கோபின் மூலமாக உருவான ஆபிரகாமின் சந்ததியை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுவருவதற்காக





தேவன் மேற்கொண்ட நடவடிக்கையை முக்கியத்துவப் படுத்தியே எட்டு முதல் பத்து வரையிலான பாடங்கள் அமைந்துள்ளன. இந்தக் காலத்தில் தான், தம் மீது விசுவாசம் உள்ளவர்களாய் வாழ்ந்த மீதியான இஸ்ரவேலருடைய இருதயங்களிலும், சிந்தனைகளிலும் தம்முடைய ராஜ்யத்தை நிலைநிறுத்தும்படியாக லேவிய ஆசாரியத்துவ முறைமையை அவர் பயன்படுத்தினார். பார்க்கவும் *யாத். 24:7,8; 31:16,17; உபாகமம் 7:9; 31:9; ஏசாயா 42:7; எரேமியா 11:10.* மனுக்குலத்தை தாம் உருவாக்கியதற்கான நோக்கத்தை அவர் ஒருபோதும் கைவிடவில்லை. *ஏசாயா 43:5-7.* ஆபிரகாமோடே தேவன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை புரிந்துகொள்ளும் கிறிஸ்தவர்கள், யாக்கோபின் மூலமாக உருவான ஆபிரகாமின் சந்ததியினரிடம் "அவர் தமது வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கையை" எப்படி செயல்படுத்தினார் என்பதை புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். தேவன் ஆபிரகாமோடே செய்துகொண்ட உடன்படிக்கைக்கு முடிவு உண்டாக்கும்படியாக இயேசு கிறிஸ்து மூலமாக தமது புதிய உடன்படிக்கையை கொடுத்திருக்கிறார். ஆகையினால், இஸ்ரவேலருக்குக் கற்றுக்கொடுக்கவும், அவர்களை கட்டுப்படுத்தவும் தேவன் இந்த மூன்று பாடங்களின் தலைப்புகளையும் எப்படி பயன்படுத்தினார் என்பதை கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மாம்சத்துக்குரிய இஸ்ரவேலை தேவன் உருவாக்கினதற்கான நோக்கத்தை நிறைவுசெய்யும்படி மேசியா வருவதற்கு சரியான காலம் வரும் வரையிலும், இதே நிலைதான் தொடர்ந்தது. *ரோமர் 8:17-25; கலாத்தியர் 4:1-7.* மீதியான மக்களை தமது பிள்ளைகளாக்கிக்கொள்ளும்படி அவர்களை காப்பாற்றுவதற்காக, ஆசாரியத்துவ முறைமையையும், இஸ்ரவேல் தேசத்தையும், தீர்க்கதரிசிகளையும் கருவிகளாக அவர்

பயன்படுத்தினார். மேசியா இந்தப் பூமிக்கு வந்து வாழ்ந்து முடித்த பிறகு “வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளை” உருவாக்க வேண்டும் என்ற அவருடைய திட்டத்திற்காகவும்கூட இந்த மூன்று காரியங்களை தேவன் பயன்படுத்திக்கொண்டார்.

1. எட்டாவது பாடத்தின் விசேஷித்த நோக்கமானது, மோசே முதற்கொண்டு இயேசு கிறிஸ்து மறுபடியும் பரலோகத்திற்கு திரும்பிய காலம் வரையிலும், லேவிய ஆசாரியத்துவ முறைமை எப்படி செயல்பட்டு வந்தது என்பதை காட்டுவதாக இருக்கின்றது. அது தனிப்பட்ட முறையில் இஸ்ரவேலருக்கு “தேவன் நியமித்த காரியக்காரராகவும் வீட்டு விசாரணைக் காரராகவும்” தன் பணியை செய்தது. *கலாத்தியர் 4:1-7.* மோசேயின் சகோதரனாகிய ஆரோன் முதல் பிரதான ஆசாரியனாயிருந்தான். *எண். 25:10-13.*

2. மாம்சத்துக்குரிய இஸ்ரவேலரை தேவன் ஏன் உருவாக்கினார்? எப்படி உருவாக்கினார்? என்பதை கற்றுக்கொடுப்பது தான் ஒன்பதாவது பாடத்தின் நோக்கம். யாக்கோபின் வழியாக உருவான ஆபிரகாமின் சந்ததிக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின தேசமானது, அவர் தமது ராஜ்யத்தை நிலைநிறுத்துவதற்கு உறுதுணையாக இருந்தது. விக்கிரக ஆராதனை செய்பவர்களோடு ஐக்கியம் கொண்டு விக்கிரக ஆராதனை செய்பவர்களாகவே மாறிப்போனதினால், இஸ்ரவேலர் சர்வ வல்லமையுள்ள தேவனோடு கொண்டிருந்த உறவை இழந்துபோனார்கள். விக்கிரக ஆராதனை செய்து வந்த மக்களை விட்டு இஸ்ரவேலரை தனிமைப்படுத்தி வைப்பதற்கு, தேவன் உருவாக்கியிருந்த அவருடைய தேசம் பயனுள்ளதாக இருந்தது.

3. தேவனுடைய ராஜ்யமாகிய இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்வதற்கு அவர் ஒரு மனிதனை அனுமதித்த போதிலும், அந்த தேசத்தின் மீது தமது ஆளுகையை நிலைநிறுத்தும்





படியாக தீர்க்கதரிசிகளை அவர் எப்படி பயன்படுத்திக் கொண்டார் என்பதை புரியவைப்பதே பத்தாம் பாடத்தின் விசேஷித்த நோக்கமாயிருக்கின்றது. *1 நாளாகமம் 28:5.* அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய மேசியாவைப் பற்றி தீர்க்கதரிசிகள் மூலமாய் தேவன் பேசினார், இது ஒரு முக்கியமான பாடம், *எபிரெயர் 11*ஆம் அதிகாரத்தில் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களைப்போல தேவனுடைய உடன்படிக்கைகளின் மீது நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்த தேவனுடைய மக்களுக்கு இது முக்கியமானதாக இருந்தது. கிறிஸ்துவாகிய மேசியா வரும் வரையிலும் அவருடைய உடன்படிக்கைகள் நிறைவேறவில்லை. *எபிரெயர் 11:39,40.* மேசியாவோடு தொடர்புடைய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் யூதர்களுக்கு மிகமுக்கியமானவைகளாக இருந்தன. இயேசு கிறிஸ்து வந்த பின்பு அவரை அடையாளம் காண்பதற்கு உதவிகரமாக இருக்கும் வேத பகுதிகளை அவர்கள் அறிந்திருந்தார்கள். துரதிர்ஷ்டவசமாக, நசரேயனாகிய இயேசு தான் அந்த மேசியா என்று அடையாளம் கண்டுகொள்ள அவர்கள் தவறிவிட்டார்கள். தீர்க்கதரிசனங்களைப் பற்றி ஆழமாக படிப்பதற்கு இந்தப் புத்தகத்தில் நமக்கு போதுமான இடம் இல்லை. “தேவனுடைய ராஜ்யம்” என்ற என்னுடைய புத்தகத்தில், தீர்க்கதரிசனத்தில் காணப்படும் தேவனுடைய ராஜ்யம் உண்மையாகிறது என்ற நான்காம் பகுதியை தயவுகூர்ந்து பாருங்கள். இந்த தலைப்புக்காக அதில் எட்டு பாடங்கள் காணப்படுகின்றன. என்னுடைய இணைய தளத்திலும் நீங்கள் இந்தப் புத்தகத்தை காணலாம். www.kingdomofchrist.info

* பார்க்கவும் “பரிசுத்த வேதாகமத்தின் முழுமையான, மதிப்பை புரிந்துகொள்ளும்படி அதை வாசிப்பது எப்படி” எழுதியவர்கள் ஃபீ மற்றும் ஸ்டுவர்ட் (Fee and Stuart).